DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,
KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | SC. No. 111 of 2021 |
| Deposition of witness for | : | PW10 |
| Name | : | சண்முகம் |
| Father's Name | : | ப. முத்துசாமி |
| Village | : | கெஜ்ஜெல் நாயக்கன் பட்டி |
| Taluk | : | சேலம் |
| District | : | சேலம் |
| Profession | : | காவல் உதவி ஆய்வாளர் (ஓய்வு) |
| Age | : | 63 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 09$^{th}$ day of October 2025.

எதிரிகள் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

முதல் விசாரணை :–

நான் 31.03.2020 ஆம் தேதி கிருஷ்ணகிரி மாவட்டம், மகாராஜா கடைகாவல் நிலைய காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போது சேலம் மாவட்டத்தில் குடியிருந்து வருகிறேன். கடந்த 08.11.2019 ஆம் தேதி கிருஷ்ணகிரி மாவட்டம், அரசு தலைமை மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற AR Intimation படி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த கிருஷ்ணன், த/பெ.வெங்கடேசன் நாயுடு என்பவரிடம் 08.11.2019 இரவு வாக்குமூலம் பெற்றும், 09.11.2019 காலை 08.30 மணிக்கு மேற்படி காவல் நிலைய குற்ற எண்.317/2019 சட்டப்பிரிவுகள் 394(NP) IPC ஆக வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் வாதியின் புகார் நகலையும், குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.II, கிருஷ்ணகிரி அவர்களுக்கு அனுப்பியும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு கோப்பினை புலன் விசாரணைக்காக சம்பந்தப்பட்ட காவல் ஆய்வாளர் அவர்களின் பார்வைக்கு வைத்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-

சம்பவம் நடந்த தேதி 08.11.2019 மதியம் சுமார் 12.10 மணி ஆகும். 08.11.2019 ஆம் தேதி இரவு அரசு மருத்துவமனையில் வாக்குமூலம் பெற்றேன். நேரம் தெரியவில்லை. மறுநாள் காலையில் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால் சம்பவ இடத்திற்கு சென்று விசாரித்து விட்டு இரவு நேரம் என்பதால் எந்த முகாந்திரமும் கிடைக்காததால் மறுநாள் காலை முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். நான் பெற்ற வாக்குமூலத்திலும், முதல் தகவல் அறிக்கையிலும் எதிரிகளின் பெயர் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றாலும், சுமார் 25 வயது மதிக்கத்தக்க அடையாளம் தெரியாத 4 நபர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் அரசு மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றாலும், வெற்றுத்தாளில் கையொப்பம் பெற்றுக் கொண்டு எதிரிகளின் மீது பொய்யான முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 09.11.2019 அன்று நீதிமன்றத்திற்கு முதல் தகவல் அறிக்கை அனுப்பினேன். நான் அன்றைய தேதியில் முதல் தகவல் அறிக்கை அனுப்பவில்லை என்றாலும், 12.11.2019 அன்று 3 நாட்கள் காலதாமதமாக அனுப்பியுள்ளேன் என்றால் நான் காலதாமதமாக அனுப்பவில்லை. 3 நாட்கள் காலதாமதத்திற்கு காரணம் சொல்லவில்லை என்றால் நான் அனுப்பி விட்டேன். நடக்காத சம்பவத்தை புள்ளி விவர கணக்கிற்காக வெற்றுப்பேப்பரில் கையெழுத்து பெற்றுக் கொண்டு எதிரிகளின் மீது பொய்யான முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்திற்கு போய் பார்க்கவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை :-

இல்லை.

M SANTHI

CHIEF JUDICIAL MAGISTRATE,KRISHNAGIRI
Digitally signed by M SANTHI

தலைமை குற்றவியல் நடுவர்,
கிருஷ்ணகிரி.